மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 107/2013

பெயர் : ரவிக்குமார்
சாட்சி – பி.வா.சா–1 நாள்: 03.07.2025

---

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (வாதிகள் தரப்பு)**

1. எனது அப்பா, பாட்டி மற்றும் சித்தப்பா ஆகியோர் சேர்ந்து கடந்த 1981 ஆம் ஆண்டில் தங்கவேல்சாமி என்பவருக்கு கிரயம் கொடுத்ததில் கிரையத்தொகை ரூபாய் 2000 என்று பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தாத்தா 1960 ஆம் ஆண்டு தாவா சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களைக் கொண்ட அளவிற்கான இனமான சொத்தினை ரூபாய் 400 தொகைக்கு வாங்கி அதனை எனது அப்பா சித்தப்பா மற்றும் பாட்டி ஆகியோர் ரூபாய் 2000 தொகைக்கு வா.சா.ஆ.7 1981 ஆம் ஆண்டு விற்றுவிட்ட போதும் அதனை மறைத்து பதிவு சட்டத்தில் இருந்து தப்பிப்பதற்காக அதே அளவுள்ள சொத்திற்கு பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை ரூபாய் 90 என்று குறிப்பிட்டு உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல.

2. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து ஒரே இனமாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள பரப்பளவை காட்டும் சிட்டா வினை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி நாங்கள் சுவாதீனத்தில் இருந்திருந்தால் இரு வேறு உட்பிரிவுகள் படி பட்டா தாக்கல் செய்திருக்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது என்றால் சரியல்ல.

3. க.ச.89/2 காலையில் இந்த வழக்கினை தாக்கல் செய்வதற்கு முன்பாக வருவாய் ஆவணங்களில் எங்களது பெயரை கிடையாது என்றும், எங்களது செல்வாக்கை பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகத்தான் எங்கள் பெயரை சேர்த்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. 03.01.2007 தேதியில் க.ச.89/1 மற்றும் க.ச.89/2 பட்டா எண் 1146 இல் எனது பெயரோ எனது அப்பாவின் பெயரோ கிடையாது என்றால் பெயர் விடுபட்டுள்ளது பின்னிட்டு தான் நாங்கள் சேர்த்தோம்.

4. பெரிய மாரப்ப கவுண்டர் எங்களுடன் இருந்ததற்கோ, எங்கள் வீட்டில் தான் இருந்தார் என்பதற்கோ ஆவணங்கள் எதுவும் கிடையாது என்றால் சரிதான். பெரிய மாரப்ப கவுண்டரின் புகைப்படத்தை என்னிடம் காட்டினால் அவரை என்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியாது. நான் சிறிய வயதில் இருந்ததால் எனக்கு நினைவில் இல்லை. நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் என்னை குறுக்கு விசாரணை செய்தபோது பெரிய மாரப்ப கவுண்டரை எனக்கு நன்கு அடையாளம் தெரியும் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

5. எங்கள் வீட்டிலேயோ, எனது பாட்டி வீட்டிலேயோ பெரிய மாரப்ப கவுண்டர் எந்த காலத்திலும் வசித்ததில்லை என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிலேயோ, எனது பாட்டி வீட்டிலேயோ பெரிய மாரப்ப கவுண்டர் வசித்து இருந்தால் கண்டிப்பாக என்னால் அடையாளம் காட்டி இருக்க முடியும் என்றும், என்னால் அடையாளம் காட்ட முடியாததிலிருந்தே அவர் எங்களுடன் வசித்ததில்லை என்பது தெளிவாகிறது என்றால் சரியல்ல. அதன் காரணமாகத்தான் எனது சித்தப்பா சாட்சியமளிக்க வராமல் நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூல ஆவணத்தின் அசலினை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். அது என்னிடம் தான் உள்ளது. சாமளாபுரம் கிராமம் வேலாயுதம்பாளையத்தில் தாவா சொத்தினை தவிர எங்களுக்கு பாத்தியப்பட்ட நத்தம் வகையில் குடியிருப்பு வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு உண்டான வீட்டு வரி உள்ளிட்ட ஆவணங்களை தான் தாவா சொத்திற்கு உண்டானது போல் தவறாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

7. தாவா சொத்திற்குள் உள்ள வீடு குடியிருக்கும் நிலையில் இல்லை என்றும், இடிந்த நிலையில் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு நாங்கள் தான் உரிமையாளர் என்று எதிர் கோருரிமை பரிகாரமோ அல்லது தனி வழக்கோ நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பெரிய மாரப்ப கவுண்டருக்கு 1 மற்றும் 2 வாதிகள் மட்டும்தான் பெண் வாரிசுகள் என்றும் அவர்களை ஒண்டிப்புதூரில் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. பெரியமாரப்ப கவுண்டர் அவர் இறுதி காலத்தை ஒண்டிப்புதூரில் கழித்து அங்கு தான் இறந்து போனார் என்றால் சரியல்ல. பெரிய மாரப்பக்கவுண்டர் ஒண்டிப்புத்தூரில் தான் இறந்தார்

என்பதை காண்பிப்பதற்கு அவரது இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

8. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை பெரியமாரப்ப கவுண்டர் எழுதிக் கொடுக்கவில்லை என்றும், அதனை பின்னிட்டு வழக்கிற்காக உருவாக்கியுள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் எங்களுக்கு எந்த உரிமையும் கிடைக்காது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எங்களுக்கு உரிமை இருந்திருந்தால் எங்கள் குடும்ப சொத்தை நாங்கள் பாகம் பிரிக்கும் போது தாவா சொத்தையும் சேர்த்து பாகம் பிரித்து இருப்போம் என்றால் சரியல்ல. நாங்கள் எப்போது குடும்ப சொத்தை பாகம் பிரித்துக் கொண்டோம் என்று எனக்கு நினைவில் இல்லை.

9. வாதிகளுக்கு கிடைக்க வேண்டிய பரிகாரம் கிடைக்கக் கூடாது என்பதற்காக போலியான ஆவணங்களை உருவாக்கியுள்ளோம் என்றும், எனவே வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN Digitally signed by V KALIDASAN Date: 2025.07.03 18:26:53 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.